27th December 1956] [Sri C. Subramaniam]

எண்ணி மகிழ்கிறேன். இன்றைக்கு உயிர்நீத்த தமிழ்ப் பெரியார்களின் ஆவிகள் எல்லாம் பார்க்கக்கூடிய சக்தி பெற்றிருக்குமேயானால், இன்று நமது சட்ட சபையின்மேலிருந்து ஆரவாரம் செய்துகொண்டிருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. அப்பேர்ப்பட்ட ஒரு நல்ல நிகழ்ச்சியிலே பங்கு எடுத்துக்கொள்ளக்கூடிய ஒரு வாய்ப்பு கிடைத்தது நம்மெல்லோருக்கும் பெரு மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. ஆகையால் இன்று, பாரதியார் சொன்ன வார்த்தைகளுடன் என்னுடைய உரையையும் சட்டசபையின் அலுவலையும் முடித்துக் கொள்கிறேன். பாரதியார் 'வாழ்க செந்தமிழ்' என்று சொன்னார்; 'வாழ்க நற்றமிழர்' என்றார். அந்த வாழ்வு ஏதோ பிரிந்த வாழ்வு என்று அவர் கருதவில்லை. 'வாழிய பாரத மணித்திரு நாடு' என்று சொன்னார். அப்பேர்ப்பட்ட வாழ்வு எங்கெங்கும் ஓங்கவேண்டும். வாழ்க தமிழ்! வாழ்க தமிழ்!! வாழ்க தமிழ்!!! (பலத்த கர கோஷம்).

DEPUTY SPEAKER: இப்பொழுது பிரச்னை என்னவென்றால், "1956-ம் வருடத்திய சென்னை அரசாங்கமொழி மசோதா சட்டமாக வேண்டும்" என்பதே.

(ஸ்ரீ பி. ராமமூர்த்தியும், மற்றும் அவருடன் சேர்ந்து எல்லா அங்கத்தினர்களும் "வாழ்க தமிழ்! வாழ்க தமிழ்!! வாழ்க தமிழ்!!!" என்று முழங்க, பலத்த ஆரவாரத்துக்கிடையே மசோதா ஏகமனதாக நிறைவேறியது.)

DEPUTY SPEAKER: சபை காலவரையறையின்றி ஒத்திவைக்கப் படுகிறது.

சபை காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டது.

V.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

211. *The Delimitation of Parliamentary and Assembly Constituencies Order*, 1956. [*Vide section* 47 (3) *of the States Reorganization Act*, 1956.]

212. *List of Government Bills passed by the Madras Legislature in September and October* 1956 *and assented to by the President.*